வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 10.01.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் குறைந்த வருமான பிரிவினருக்கும் தரமான சேவை வழங்கும் வகையிலான புதிய அமிர்தபாரத் எக்ஸ்பிரஸ் ரயில்கள், விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என ரயில்வே அமைச்சர் திரு **அஸ்வினி வைஷ்ணவ்** தெரிவித்துள்ளார்.

மகா கும்பமேளாவை ஒட்டிய, ஆகாஷ்வாணியின் பிரத்யேக **கும்பவாணி** வானொலி அலைவரிசை, உத்தரபிரதேஷ் மாநிலம் **பிரயாக்ராஜில்** இன்று தொடக்கி வைக்கப்பட்டது.

அரசின் திறம்பட்ட கொள்கைகள் காரணமாகவே, இந்தியா, முன்னேறிய நாடாக விரைந்து மேம்பட்டு வருவதாக, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் **டாக்டர் எல் முருகன்** கூறி உள்ளார்.

புதுச்சேரியில் விவசாயிகளின் கூட்டுறவுக் கடன், வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டதற்கான **சான்றிதழ்களை**, துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர் இன்று விவசாயிகளுக்கு வழங்கினர்.

நாட்டில் நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் குறைந்த வருமான பிரிவினருக்கும் தரமான சேவை வழங்கும் வகையிலான புதிய அமிர்தபாரத் எக்ஸ்பிரஸ் ரயில்கள், விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என ரயில்வே அமைச்சர் திரு **அஸ்வினி வைஷ்ணவ்** தெரிவித்துள்ளார். சென்னை ஐசிஎப்-ஒருங்கிணைந்த ரயில்பெட்டி தொழிற்சாலையில் இன்று நேரடி ஆய்வு மேற்கொண்ட அவர், பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதைத் தெரிவித்தார். நாட்டு மக்கள் அனைவருக்கும் உலகத் தரம் வாய்ந்த வசதிகளை வழங்குவதே, பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வை என்றும், இந்த இலக்கை எட்டவே, 2-ஆம் கட்ட அமிர்த பாரத் இயக்கம் தொடக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். அமிர்த பாரத் ரயில் பெட்டிகளில் பயணிகளின் வசதி மற்றும் பாதுகாப்பிற்கான 12 முக்கிய அம்சங்கள் சேர்க்கப்பட்டு, தரம் உயர்த்தப் பட்டுள்ளதாகவும் குறைந்த வருமான பிரிவினருக்கு ஏற்ற 50 புதிய ரயில்களை அடுத்த 2 ஆண்டுகளுக்குள் அறிமுகப்படுத்த திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அமிர்த பாரத் எக்ஸ்பிரஸ் பெட்டிகளில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள மாடுலார் கழிவறை, தீப்பாதுகாப்பு உள்ளிட்ட புதிய வசதிகளை ரயில்வே அமைச்சர் அறிமுகப்படுத்தினார். சர்வதேச நிபுணத் துவத்துடன் வடிவமைக்கப்பட்ட, புதிய பாம்பன் பாலத்திற்கான கட்டுமானப் பணிகள்

முடிந்து விட்டதாகவும், இதனால் போக்குவரத்து தொடர்புகள் மேம்படும் என்றும் அவர் கூறினார்.

கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் பதில் அளிக்கையில், ஜம்மு-ஸ்ரீநகர் மார்க்கத்தில் வந்தே பாரத் ரயில் சேவைகள் இன்னும் பூர்த்தியாகவில்லை என்றும், சுரங்கப் பாதைகள் அதிகம் உள்ள இப்பிரிவில் கூடுதல் சோதனை ஓட்டங்கள் தேவைப்படுவதாகவும் கூறினார். இந்திய ரயில்வேயில் பாதுகாப்பு அம்சங்கள் வலுப்படுத்தப் பட்டுள்ளதாகவும், 10 ஆயிரம் ரயில் இன்ஜின்களில் பாதுகாப்பிற்கான **கவச்** தொழில் நுட்பம் சேர்க்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். நீண்ட தூர ரயில்களுக்கான ஸ்லீப்பர் பெட்டிகளின் வடிவமைப்பில், புதிய வசதிகளை சேர்க்க திட்டமிடப் பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

தொடர்ந்து திருவள்ளுரில், தனியார் துறை மூலம், **ரயில் சக்கரங்கள் உற்பத்தி பிரிவு** அமைக்கும் பணிகளை, அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் நேரில் பார்வையிட்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், இந்திய ரயில்வே துறையின் எதிர்கால ரயில்களுக்கு, அதிக திறன் வாய்ந்த 80 ஆயிரம் சக்கரங்கள் தேவைப்படுவதாகவும் இந்தியாவில் தயாரிக்கப்படும் ரயில் சக்கரங்கள், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும் என்றும் கூறினார். உலகத் தரமான உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இந்தியாவை, வலுவான சுயசார்பு

நாடாக மேம்படுத்துவதே அரசின் குறிக்கோள் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

*கும்பவாணி*

மகா கும்பமேளாவை ஒட்டிய, ஆகாஷ்வாணியின் பிரத்யேக **கும்பவாணி** வானொலி அலைவரிசை, உத்தரபிரதேஷ் மாநிலம் பிரயாக் ராஜில் இன்று தொடக்கி வைக்கப்பட்டது. மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் புதிய அலைவரிசையை தொடக்கி வைத்தார். கும்பமேளா குறித்த விவரங்களை தொலைதூர கிராமங்கள் வரை எடுத்துச் செல்லவும் கும்பமேளாவிற்கு நேரில் வர இயலாதவர்களுக்கும் விழா அனுபவத்தை வழங்கவும் புதிய அலைவரிசை உதவிகரமாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார். சாதி உள்ளிட்ட எல்லா பேதங்களுக்கும் அப்பாற்பட்டு, மக்களிடையே ஒற்றுமை உணர்வை பரப்பக் கூடிய விழா கும்பமேளா என்றும் பாரம்பரிய மரபுகள் மற்றும் கலாச்சாரத்துடன் மக்களோடு இணையக் கூடிய முதன்மையான ஊடகம் ஆகாஷ்வாணி தான் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரசார் பாரதி தலைவர் திரு நவநீத் குமார் சேகல் இந்நிகழ்ச்சியில் பேசுகையில் ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் மூலம் கும்பமேளா நிகழ்வுகளை நேரடியாக ஒளிபரப்ப, விரிவான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாக தெரிவித்தார். விழா நிகழ்வுகளை வானில் இருந்து படம்

பிடித்துக் காட்ட 40 ஹெலி-கேமராக்கள் பயன்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

பிரசார் பாரதி தலைமை செயல் அதிகாரி திரு கவுரவ் துவிவேதி, ஆகாஷ்வாணி தலைமை இயக்குநர் டாக்டர் பிராக்யா பலிவால் கவுர், தூர்தர்ஷன் தலைமை இயக்குநர் திருமதி காஞ்சன் பிரசாத் உள்ளிட்டோர், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

மத்திய தகவல்- ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் காணொளி காட்சி மூலம் இந்நிகழ்ச்சியில் தம்மை இணைத்துக் கொண்டார்.

முருகன்

2047-ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சி அடைந்த நாடாக மேம்படும் இலக்கை நோக்கி இந்தியா வேகமாக முன்னேறி வருவதாக, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார். அரசின் திறம்பட்ட கொள்கைகளும், பல்வேறு முன் முயற்சிகளுமே, இதற்கு காரணம் என்று அவர் இன்று கொல்லம் அருகே அவனீஸ்வரத்தில் பள்ளி நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் கூறினார். கேரளத்தைச் சேர்ந்த கவிஞரும் சுற்றுச்சுழல் வாதியுமான அமரர் சுகதகுமாரியின் 90-ஆம் ஆண்டு பிறந்த நாளை ஒட்டி, மாநிலமெங்கும் 126 பள்ளிகளில் மொத்தம் 11 ஆயிரத்து 340 மரக்கன்றுகளை நடும் இயக்கத்தை அமைச்சர் இந்நிகழ்ச்சியின் போது தொடக்கி வைத்தார்.

சுற்றுச்சூழலை பாதுகாக்க அரசு உறுதிப்பாடு கொண்டுள்ளதாக அவர் கூறினார். உலக சுற்றுச்சூழல் தினத்தன்று பிரதமர் திரு நரேந்திர மோடி தொடக்கி வைத்த, **தாயின் பெயரில் ஒரு மரம்** இயக்கத்தினால், பசுமைச் சூழல் மற்றும் தூய சுற்றுப்புறம் குறித்து விழிப்புணர்வு அதிகரித்து வருவதாக அவர் தெரிவித்தார். இந்தியாவின் நிகர கார்பன் புகை வெளியீட்டை 2070-ஆம் ஆண்டிற்குள் பூஜ்யமாக குறைக்கும் வகையில் நீண்ட கால கொள்கை ஒன்றை அரசு உருவாக்கி இருப்பதாகவும் டாக்டர் எல் முருகன் தெரிவித்தார்.

கடன் தள்ளுபடி

புதுச்சேரி பிராந்தியத்தில் உள்ள கூட்டுறவு விவசாய கடன் சங்கங்களில் விவசாயிகள் பெற்ற கடன், வட்டி மற்றும் அபராத வட்டி 11.6 கோடி ரூபாயை தள்ளுபடி செய்ய சட்டமன்றத்தில் முதலமைச்சர் வெளியிட்ட அறிவிப்பின்படி, முதல் தவணையாக, அரசு 2 கோடி ரூபாய் வழங்கி உள்ளது. சம்பந்தப்பட்ட சங்கங்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு கடன் தள்ளுபடிக்கான சான்றிதழ்களை, வில்லியனூரில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன். முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் வழங்கினர். துணை நிலை ஆளுநர் இந்நிகழ்ச்சியில் பேசுகையில் புதுச்சேரியில் தாம் பொறுப்பேற்ற பின் பிரதமரை சந்தித்த போது இலவச அரிசி, விவசாயக் கடன் ஆகிய 2 கோரிக்கைகளை முன் வைத்ததாகவும், கடன் தள்ளுபடி கோரிக்கைக்கு

பிரதமர் உடனடியாக ஒப்புதல் அளித்ததாகவும் கூறினார். விவசாயிகள், வழக்கமான பயிர் சாகுபடிக்கு அப்பாற்பட்டு வேறு விதமாக சிந்திக்க வேண்டும் என துணை நிலை ஆளுநர் கேட்டுக் கொண்டார். ஏனாம் அருகே ஆந்திரப் பகுதியில் உள்ள கடியம் கிராமத்தில், விவசாயிகள் சாலை ஓரத்தில் பலவிதமான செடிகளைப் பயிரிட்டு, லாரிகள் மூலம் நாடு முழுவதற்கும் அனுப்பி வருவதை, இதற்கு எடுத்துக்காட்டாக அவர் சுட்டிக் காட்டினார். துணை நிலை ஆளுநர் மேலும் கூறுகையில்................

(வாய்ஸ்)

கூட்டுறவுத் துறை மற்றும் வேளாண் துறை சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு ரங்கசாமி பேசுகையில், புதுச்சேரியில் குடும்ப அட்டைகளுக்கான மாதாந்திர இலவச அரிசியும், 750 ரூபாய் பொங்கல் தொகையும் இன்று முதல் வழங்கப்படும் என்றார். மேலும் அவர் கூறுகையில்........................

(வாய்ஸ்)

இ□வச அரிசி

தொடர்ந்து துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர், புதுச்சேரியில் சிவப்பு குடும்ப அட்டைகளுக்கு மாதம் 20 கிலோ மற்றும் மஞ்சள் குடும்ப அட்டைகளுக்கு மாதம் 10 கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டத்தைத் தொடக்கி வைத்தனர்.

*நியமன ஆணை*

புதுச்சேரியில் பள்ளிக் கல்வி இயக்குநரகத்தின் கீழ் நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்யப்பட்ட தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் 9 பேருக்கு முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று, பணி நியமன ஆணைகளை வழங்கினார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம், பள்ளிக் கல்வி இயக்குநர் திருமதி பிரியதர்ஷினி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

*வாக்காளர் கல்வி*

தேசிய வாக்காளர் தினம் வரும் 25-ஆம் தேதி கொண்டாடப்படுவதை முன்னிட்டு, புதுச்சேரி அரசின் தேர்தல் துறை, கல்லூரி மாணவர்கள் மற்றும் அரசு அலுவலர்களுக்கான. பேட்மிண்டன் போட்டிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது. நெல்லித்தோப்பு விரிவாக்க பகுதியில் உள்ள ராகவேந்திரா நகரில், நாளையும், நாளை மறுநாளும் நடைபெற உள்ள இப்போட்டிகளில், மாநில அரசின் தலைமை தேர்தல் அதிகாரி தொடக்கி வைக்கிறார். சுமார் 400 பேர் இப்போட்டிகளில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக தேர்தல் துறை தெரிவித்துள்ளது.

*பனி மூட்டம்*

தலைநகர் டெல்லியிலும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் இன்று அடர்த்தியான பனிமூட்டம் நிலவியதால், பிரயாக்ராஜ் எக்ஸ்பிரஸ், ஷ்ரம்சக்தி எக்ஸ்பிரஸ் உட்பட, பல்வேறு நீண்டதூர ரயில்கள் தாமதமாக

இயக்கப்பட்டன. டெல்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்திலும் இன்று காலை நூற்றுக்கும் மேற்பட்ட விமானங்களின் இயக்கம் தாமதமாயிற்று. டெல்லி, பஞ்சாப், அரியானா மற்றும் சண்டிகர் பகுதிகளில் நாளையும், அதிகாலை மற்றும் இரவு நேரத்தில், கடும் பனி மூட்டம் நீடிக்கலாம் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*ஜெயசந்திரன்*

திரைப்பட பின்னணி பாடகர் பி ஜெயசந்திரன் மறைவிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி, ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார். பாடகர் ஜெயசந்திரனின் அற்புதமான குரல் பல்வித உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடியது என்றும் பல்வேறு மொழிகளில் அவர் பாடியுள்ள பாடல்கள், இனி வரவிருக்கும் தலைமுறைகளிலும் மக்கள் மனங்களில் நீங்காது நிற்கும் என்றும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறி உள்ளார்.

*நி□க்கரி*

ஜார்கண்ட் தலைநகர் ராஞ்சியில் புதிதாக கட்டப்பட உள்ள மத்திய நிலக்கரி வயல் நிறுவனத்தின் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைக்கு, மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் திரு கிஷண்ரெட்டி இன்று அடிக்கல் நாட்டினார். 200 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட உள்ள இந்த மருத்துவமனை, சுகாதாரத் துறையில் மைல்கல் சாதனையாக அமையும் என்று அவர் கூறினார். மேலும், இந்திய நிலக்கரி மேலாண்மை கல்வி நிறுவனத்தின் பயிற்சி அதிகாரிகளோடு கலந்துரையாடிய அமைச்சர்,

பசுமை எரிசக்தி மற்றும் அதன் பயன்பாட்டினை ஊக்குவிப்பது குறித்து வலியுறுத்தினார்.

*இந்தியா உதவி*

ரபேல் சூறாவளியால் பாதிக்கப்பட்ட கியூபா நாட்டிற்கு, இந்தியா மனிதாபிமான உதவிகளை வழங்கி உள்ளது. ஆன்டிபயாட்டிக்ஸ், வலி நிவாரணி, ஓஆர்எஸ் மற்றும் இதர அத்தியாவசிய மருந்துகள் இன்று கியூபாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் திரு ரண்பீர் ஜெய்ஸ்வால், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

**மீண்டும் தலைப்புச் செய்திகள்**

நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் குறைந்த வருமான பிரிவினருக்கும் தரமான சேவை வழங்கும் வகையிலான புதிய அமிர்தபாரத் எக்ஸ்பிரஸ் ரயில்கள், விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என ரயில்வே அமைச்சர் திரு **அஸ்வினி வைஷ்ணவ்** தெரிவித்துள்ளார்.

மகா கும்பமேளாவை ஒட்டிய, ஆகாஷ்வாணியின் பிரத்யேக **கும்பவாணி** வானொலி அலைவரிசை, உத்தரபிரதேஷ் மாநிலம் **பிரயாக்ராஜில்** இன்று தொடக்கி வைக்கப்பட்டது.

அரசின் திறம்பட்ட கொள்கைகள் காரணமாகவே, இந்தியா, முன்னேறிய நாடாக விரைந்து மேம்பட்டு வருவதாக, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் **டாக்டர் எல் முருகன்** கூறி உள்ளார்.

புதுச்சேரியில் விவசாயிகளின் கூட்டுறவுக் கடன், வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டதற்கான சான்றிதழ்களை, துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர் இன்று விவசாயிகளுக்கு வழங்கினர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-----------------------------